**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

MCOP No: 80/2023 நாள் 07.11.2025

மதியழகன் ஓட்டுநர் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு எ.ம.சா.1 ஆக 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு.K.மாரிராஜா என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதியழகன் | தாலுகா | |
| த–பெ | பால்பாண்டி | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | | வயது | 52 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**குறுக்குவிசாரணை மனுதாரர்கள் தரப்பில்**

விபத்து சமயத்தில் TN 74 N 1840 என்ற அரசு பேருந்தை நான் தா்ன ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். விபத்துக்கு நான் காரணம் என்று சொல்லி விருதுநகர் பஜார் காவல் நிலையத்தில் எனக்கு எதிராக தான் முதல் தகவல் அறிக்கை பதிவாகியுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் இறந்துபோன சிவக்குமார் என்பவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடந்ததாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. விபத்திற்கு நான் தான் கரணம் என்பதால் மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீடு தொகையை எங்கள் போக்குவரத்து கழகம் தான் செலுத்த வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 07th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.